<u>குளித்தலை நகராட்சி</u>

2022ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 30ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள்பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

--------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் தேவதானம் தெருவில் உள்ள கழிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இல்லாததால், மராமத்து செய்வது மிகவும் அவசியம். எனவே இக்கழிப்பிடத்தை மராமத்து பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1163/2022/இ1)

பொருள்– 02. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் குயவர் தெருவில் மழைநீர் வடிகால் இல்லாமல் சாலையில் கழிவுநீர் செல்வதால் பொதுமக்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள். மேலும், இப்பகுதியில் அமைத்துள்ள கழிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே இப்பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3,50,000/– (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1181/2022/இ1)

பொருள்– 03. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2ல் மணத்தட்டை கடைவீதியில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளதால் சுகாதாரகேடு விளைவிக்கும் வகையில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இச்சூழலை தவிர்க்கும் பொருட்டு மழைநீர் வடிகால் மராமத்து பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.50,000/– (ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்) ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1196/2022/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17, வைகைநல்லூர் அக்ரஹாரம் தெருவில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. பொதுமக்கள் சென்றுவர மிகுந்த சிரமமாக உள்ளதால், இச்சாலையினை மராமத்து பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2,50,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1137/2022/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் சுங்ககேட் பகுதியில் உள்ள கழிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே இக்கழிப்பிடத்தை மராமத்து பணி மேற்கொள்ளவும், புதிதாக இரண்டு கழிப்பிடம் கட்டுவதற்கும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1162/2022/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி வைகைநல்லூர் வடக்கு கிராமம் T.S.No.100/1ல் உள்ள இடத்தில், அண்ணாநகர் புறவழிச்சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டு, நகராட்சிமூலம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றது. மேற்கண்ட சாலை மணப்பாறை சாலை இரயில்வேகேட் முதல், இரயில் நிலையம், நகராட்சி அலுவலகம், உழவர் சந்தை, மருத்துவ மனை, பேருந்து நிலையம், வங்கிகள் போன்ற இடங்களுக்கு செல்லும் சாலையாக உள்ளது. இந்த சாலையை அபிவிருத்தி செய்தபோது O.S.No.222/2001ல் திரு.சீனிவாசன் என்பவர் குளித்தலை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கின் தீர்ப்பானது மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மீண்டும் நகராட்சிமூலம் A.S.No.50/2010ல் குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கு 7/2010ல் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டது. மேலும், நகராட்சிமூலம் இரண்டாம் மேல்முறையீடு வழக்கு S.A.(MD) No.672/2016ல் தொடரப்பட்டது. மேற்படி வழக்கில், மேற்கண்ட சாலைக்கு இழப்பீடு தொகையாக ரூ.13,23,960/–ஐ, நில உரிமைதாரர்களுக்கு 31.05.2022க்குள் வழங்கப்பட வேண்டும் என்றும், 01.06.2022 பிறகு வழங்கும்பட்சத்தில், 12% வட்டியுடன் வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட வழக்கில், நகராட்சி நிர்வாகம், கூட்டுறவு கட்டிட சங்கம், நகர் மற்றும் புனரமைப்பு திட்டம், திருச்சி ஆகிய மூன்று துறைகளும் சேர்ந்து மேற்கண்ட தொகை ரூ.13,23,960/–ஐ செலுத்தவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்ட காரணத்தால், எந்த துறை எவ்வளவு தொகை செலுத்த வேண்டும் தெரியாததால், மீண்டும் மேல்முறையீடு வழக்கு தொடரப்பட்ட நிலையில், நில உரிமைதாரர்கள் மீண்டும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.936/2022ல் தொடரப்பட்டதில், மேற்கண்ட சாலை மற்ற துறைகளுக்கு பயன்படாததால், நகராட்சி மட்டுமே பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உரிய துறையாக இருந்து வருவதால், நீதிமன்ற தீர்ப்பின்படி தொகை ரூ.13,23,960/–ஐ, டிசம்பர்–2022க்குள் நில உரிமைதாரர்களுக்கு தொகையினை செலுத்தவும், தவறினால், வட்டியுடன் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட தீர்ப்பின்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3087/2001/பி2)

*******

<u>குளித்தலை நகராட்சி</u>

குளித்தலை நகர்மன்றத்தின் 30.09.2022ஆம் தேதிய அவசரக் கூட்டத்தின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 56 | அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 57 | அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 58 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 59 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 60 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 61 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–P.சகுந்தலா,
நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.